`

## 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.2209/2020

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.1 |
| பெயர் | கிஷோர்குமார் |
| க/த.பெயர் | தென்னரசு |
| வயது | 24 |
| விலாசம் | சோழவரம், சென்னை |
| தொழில் | மாணவர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 12.02.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

### 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் லாரி நான் சென்ற இடது புறத்தில் வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாலையில் நான் இடது புறமாக செல்லாமல் வலது புறமாக சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் வலது புறமாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் நான் கவனித்து தான் சென்றேன். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்திருந்தால் குறிப்பிட்டுள்ள தலைகாயங்கள் எனக்கு ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் படித்துக்

கொண்டிருந்தேன். பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் பகுதி நேர வேலை பார்த்ததாக கூறியிருக்கிறேன் என்றால் அப்போது பகுதி நேரம் வழக்கறிஞர் பயிற்சி பெற்று வந்தேன். என்னுடைய கல்வி மற்றும் வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்ததால் விபத்து சமயத்தில் வேலைக்கு போயிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மசாஆ11 காப்பீடானது உண்மை தான் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து குறித்து மாதிரி வரைபடம் மற்றும் விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்து விட்டதால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் தர கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**